**மே - 25**

**"நீ தீமையினால் வெல்லப்படாதே." - ரோம 12 : 21**

நாம் ஒருபொழுதும் தீமையான வார்த்தைகளை உபயோகிக்கவோ அல்லது தீமையான முறைகளையோ அல்லது தீமையான நடத்தையையோ மேற்கொள்ளக் கூடாது. அப்படி செய்வது தற்காலிகமாக எதிராளியோடு சேருவதாகும், அல்லது அவனது ஆயுதங்களும் முறைகளும், நம்முடைய அதிபதியினுடைய ஆயுதங்களையும் முறைகளையும் விட மேலானவைகள் என்று ஒப்புக்கொள்ளுவதாகும். கோபத்திற்குப் பதில் கோபத்தையும், துர்ச்செய்திகளுக்குப் பதில் துர்ச்செய்தியையும், கசப்பான வார்த்தைகளுக்குப் பதில் கசப்பான வார்த்தைகளையும், அவதூறுக்குப் பதில் அவதூறையும், துன்பப்படுதலுக்குப் பதில் துன்பப்படுதலையும், அடிக்குப் பதில் அடியையும் அல்லது இவைகளில் ஏதாவதொன்றையோ செய்வது, தீமையை தீமையினாலே வெல்ல முயற்சி செய்வதாகும். புது சுபாவத்தையும் மிகவும் முற்றிலுமாக நாம் விருத்தி செய்ய வேண்டுமென்பதற்காக, விழுந்துபோன சுபாவத்திற்கு இயல்பான இதைத்தான் தவிர்க்க நமக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. இந்த வழிகளில் எதிலாவது எதிராளியின் முறைகளை உபயோகிக்க அவனால் தவறான வழியில் அழைத்துச் செல்லப்படுவது தீமையினால் வெல்லப்படுவதாகும். **- Z ’97, 267 (R 2212).**

எல்லா விதமான தீமைகளும் கர்த்தரின் ஜனங்களைத் தாக்க அனுமதிக்கப்படுகின்றன. பிசாசு, உலகம், மாம்சம், புது இருதயத்தையும், மனதையும், சித்தத்தையும் இடைவிடாமல் மேற்கொள்ள நாடுகின்றன. பிடிவாதமான போர்கள் மூலமாக மாத்திரமே நம்முடைய விரோதிகளின் மேல் வெற்றிகொள்ள சாத்தியமாக்கப்படுவோம். இந்தப் போரில் தேவனுடைய ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கை நமக்கு உற்சாகத்தையும் கொடுக்கிறது. அவருடைய ஆவியும், வார்த்தையும், பராமரிப்பும் பகைவரிடமிருந்து தற்காக்கவும் பகைவரை தாக்கவும் உபயோகிக்கப்படுகிற போராயுதங்களாகும். இவைகளுடன் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவோமாக. அதன் பலனாக, தீமையினால் வெல்லப்படுவதற்கு பதிலாக அதை நாம் வெல்லுவோம். **- P '33, 79.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

யாத் 23:4,5; உபா 32:35; நீதி 19:11; 24:17,29; 25:21,22; மத் 5:7,30-45; லூக் 6:35-37; ரோம 12:14,17,19,20; எபி 10:30; அப் 7:60; 1கொரி 4:12; 1பேது 3:9.

**கோபுர வாசிப்பு : Z ’15, 179 (R 5705)**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் நான் தீமையை வென்றேனா? எப்படி? அதில் உதவியாக இருந்தது எது? அதன் பலன் என்ன?